திருவள்ளுவர் ஆண்டு 2040

# செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 52 பகுதி : 13 | நவம்பர் - 09 | விலை ரூ. 10/-



மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு

## திருக்குறளில் அடி முதல் முடி வரை

**ஆறுவிரல் ஐம்பொறி**

நமது உடலில் 'அடி முதல் முடி வரை' பல உறுப்புகள் உள்ளன. இவ்வுறுப்புகளை பாதாதி கேசம் என்று சிலர் கூறுவர். திருக்குறளில் உள்ள சில உடல் உறுப்புகளை இவண் காணலாம்.

| | | | |
|---|---|---|---|
| 1. | அடி | அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்<br>**அடி**க்கு நெருஞ்சிப் பழம் | 1120 |
| 2. | கால் | கழா அக்**கால்** பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்<br>குழாஅத்துப் பேதை புகல் | 840 |
| 3. | இடை | அனிச்சம்பூக் கால்களையாள் பெய்தாள் **நுசுப்**பிற்கு<br>நல்ல படாஅ பறை | 1115 |
| 4. | வயிறு | **அகடு** ஆரார் அல்லல் உழப்பர்சூ தென்னும்<br>முகடியால் மூடப் படார் | 936 |
| 5. | முலை | கல்லாதான் சொற்கா முறுதல் **முலை**யிரண்டும்<br>இல்லாதான் பெண்காமுற் றற்று | 402 |
| 6. | நெஞ்சு | **நெஞ்**சின் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து<br>வாழ்வாரின் வன்கணார் இல் | 276 |
| 7. | கை | கொல்லான் புலாலை மறுத்தானைக் **கை**கூப்பி<br>எல்லா உயிருந் தொழும் | 260 |
| 8. | தோள் | முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்<br>வேலுண்கண் வேய்**தோள்** அவட்கு | 1113 |
| 9. | நா | யாகாவா ராயினும் **நா**காக்க காவாக்கால்<br>சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு | 127 |
| 10. | வாய் | ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே தீய<br>வழுக்கியும் **வாயா**ல் சொலல் | 139 |
| 11. | செவி | மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்<br>சொற்கேட்டல் இன்பம் **செவி**க்கு | 65 |
| 12. | மூக்கு | புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி<br>**மூக்கி**ல் கரியார் உடைத்து | 277 |
| 13. | கண் | கண்களவு கொள்ளும் சிறுநோக்கம் காமத்தில்<br>செம்பாகம் அன்று பெரிது | 1092 |
| 14. | புருவம் | கொடும் **புருவம்** கோடா மறைப்பின் நடுங்கஞர்<br>செய்யல மன்இவள் கண். | 1086 |
| 15. | நெற்றி | ஒள்**நுதற்கு** ஓஒ உடைந்ததே ஞாட்பினுள்<br>நண்ணாரும்–உட்கும் என்பீடு | 1088 |
| 16. | முடி (கூந்தல்) | வேட்ட பொழுதின் அவைஅவை போலுமே<br>தோட்டார் **கதுப்**பினாள் தோள் | 1105 |

இவ்வுடல் உறுப்புகளில் புருவம், கண், செவி, தோள், முதலிய உறுப்புகள் இரட்டை உறுப்புகளாக அமைந்திருக்கின்றன. ஆதலால் இவ்வுறுப்புகள் பன்மைக்குரிய 'கள்' விகுதி பெறா.

"கண்ணும் தோளும் முலையும் பிறவும்
பன்மை சுட்டிய சினைநிலைக் கிளவி" – தொல் – சொல் – 61

இவ்வுறுப்புகளின் ஒருமையே பன்மை சுட்டும் என்பது இந்நூற்பாவின் பொருளாம். புருவங்கள், கண்கள், செவிகள், தோள்கள், முதலிய சொற்கள் திருக்குறளில் ஓரிடத்தில் கூடஇல்லை என்பது இவண் குறிப்பிடத் தக்கது.

நமக்கும் உடல் உறுப்புகள் உள்ளன. திருக்குறளிலும் உடல் உறுப்புகள் உள்ளன. எனவே நாம் (மாந்தர்) வாழும் வரை திருக்குறளும் வாழும் என்பது திண்ணம்.

# செந்தமிழ்

(தோற்றம் 1902)

தொகுதி : 52
பகுதி : 13
நவம் 2009

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2040




| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |

முகவை மன்னர் **நா.குமரன் சேதுபதி**
தலைவர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்.

**ஆசிரியர்**
**இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை.

## பொருளடக்கம்


இதழ்மணம் 3

கலித்தொகை நாடகத் திறன் 4
முனைவர் அரசக்கண்ணன்

தனிமனிதனின் சமுதாயப் பங்களிப்புகள் 13
முனைவர் சு. குழந்தைவேல் பன்னீர்செல்வம்

திருக்குறளின் திருவருள் 26
முனைவர் க. சின்னப்பா

இலக்கியத்தில் இளமையும் முதுமையும் 34
புலவர் சி. பாண்டுரொங்கன் ஆம்பூர்
(முன் இதழின் தொடர்ச்சி...)

# இதழ் மணம்

திருக்குறளில் உடலுறுப்புகள் பயின்று வருவதை தக்க சான்றுகளுடன் விளக்கியுள்ளார் ஆறுவிரல் ஐம்பொறி. கலித்தொகை நூல்களை விட கலித்தொகை நாடகத்தன்மைக்குத் தரும் முக்கியத்துவத்தையும் விளக்கியுள்ளார் முனைவர் அரசக்கண்ணன் தனிமனிதனுக்கும், சமூகத்திற்கும் இடையிலான தொடர்பு, சமகால அரசியல் சீரழிவு, நாம் எதிர்காலத்தில் கண்டடைய வேண்டிய மொழிக்கொள்கை முதலியவற்றை நுட்பமாக வெளிப்படுத்தியுள்ளார் முனைவர் சு.குழந்தைவேல் பன்னிர்செல்வம். திருக்குறளானது நம் நாட்டவரை மட்டுமின்றி வெளிநாட்டவரையும் பாதித்த தன்மை, திருக்குறளின் உள்ளடக்கச்சிறப்பு முதலியவற்றை நுட்பமாக ஆய்வுக்குட்படுத்தி முனைவர் க.சின்னப்பா வெளிப்படுத்தியுள்ள பாங்கு திருக்குறளின் இறவளத்தன்மையை வெளிப்படுத்துவதாக உள்ளது. சங்கப் பாடல்களிலுள்ள குழந்தைகள் பற்றிய செய்திகள், பிள்ளைத்தமிழ் நூல்கள் குழந்தைகளைவருணித்ததில், பாரதியின் குழந்தைப் பருவ நிகழ்வு முதலியவற்றைத் தொகுத்துத் தந்துள்ளார் சி. பாண்டு ரெங்கன். தமிழின் செழுமையினையும், பெருமையினையும் அடுத்த தினத்திற்கு எடுத்துச்செல்லும் வகையில் இம்மாத இதழ் மணம் வீசட்டும்.

—முனைவர் க. சின்னப்பா

# கலித்தொகை நாடகத் திறன்

முனைவர் அரசக்கண்ணன்

நாடகம் தமிழில் சிறந்தோங்கியிருந்தமையை, நம் பண்டைய நூல்களில் காணப்படும் செய்திகளால் அறியலாம். தொல்காப்பியத்திற்கு முற்பட்ட அகத்தியம் நாடக இலக்கணம் கொண்டு விளங்கியதாகக் கூறுவர். "அகத்தியனாரால் செய்யப்பட்ட மூன்று தமிழ்" என்ற வரியாலும் அது முதனூலாகிய அகத்தியமே போலும் என்னை ? அஃது இயற்தமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ், என்னும் மூன்று பிண்டத்தினையும் அடக்கி நிற்றலின்" என்று பேராசிரியர் உரையாலும் அது விளக்கமாகிறது. புலவர் இயற்றும் பனுவல்களில் உள்ள மரபு பற்றிக் கூறுமிடத்து நாடகம் என்ற சொல்லும் தொல்காப்பியத்தில் இடம் பெற்றுள்ளது. இயல், இசை, நாடகம் என்று தமிழை மூன்றாகப் பிரித்து முத்தமிழ் என்றே வழங்கி வந்துள்ளனர். ஏனைய மொழிகளில் இப்பிரிவுகள் இருப்பினும், அம்மொழிகள் முத்தமிழ் என்று தமிழை வழங்குதல் போல் வழங்குமாற்றிலை. எனினும் நாடகத்திறங்கள் இன்னும் நெறிபடுத்தப்பட வேண்டிய நிலையே உள்ளன.

"நாடகம் நடிப்பதற்காக மட்டும் எழுதப்படுவதில்லை. நாவல் மாதிரி சிறுகதை மாதிரி படிப்பதற்காகவே பிற மொழியிலும் பல ஆன்றோர்கள் அது போன்று முயற்சிகளில் ஈடுபட்டிருக்கின்றனர்" என்பர். ஆதலில் நடிப்பதற்கென்றும், படிப்பதற்கென்றும் நாடகம் இரு வகைப்படும். "நடிக்கும் வகையிலன்றி எழுத்து வகையான் அமைந்த நாடக இலக்கியத்துக்கு வடிவ வரையரையில்லை பொருளைச் சொல்லிச் செல்லும் முறையில் நாடகப் பண்புகள் அமைந்துள்ளனவா ? என்று காணலே தகும்" என்பர்,

சங்கப் பகுப்பாகிய எட்டுத்தொகையில் ஆறாவதாக 'கற்றறிந்தாரேத்துங்கலி' என்று போற்றப்படும் கலித்தொகை இடம் பெற்றுள்ளது.

முதற்பாடலாக கடவுள் வாழ்த்தும், பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல், என்ற வரிசையில் ஐந்திணைக்கும் முறையே 35 ,29, 35 ,17, 33 பாடல்களும் ஆக நூற்றைம்பது பாடல்களைக் கொண்டது இந்நூல். இவை தனித்தனிப்பாடல்களாகவுமுள. கடவுள் வாழ்த்துத் தவிர அனைத்தும் அகப் பொருள் பாட்டுக்களாகும்.

"கலியே பரிபாட்டு ஆயிரு பாவினும்
உரியதாகும் என்மனார் புலவர்"

என்று அகப்பொருள் பாடுவதற்குரிய பாவினம் இரண்டனுள் முதலாவதாகக் கலிப்பாவைத் தொல்காப்பியம் கூறுகிறது. பாவின் பெயரை இத்தொகை நூல் பெயராகவும் கொண்டுள்ளது. இத்தொகையில் அமைந்துள்ள ஒவ்வொரு பாட்டும் தனித்தனி நாடகச் செய்யுட்களாகக் கோத்தமைந்ததாக உள்ளது எனினும், இவற்றின் நாடகக் கூறுகள் பொது நிலையில் தொகுத்தளிப்பதற்குரியனவாய் உள்ளன.

கலித்தொகை முழுவதும் கலிப்பாவால் ஆனது. தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம், என்னும் அமைப்பினது ஒத்தாழிசைக்கலியாகும். இத்தொகை நூலில் ஒத்தாழிசைக் கலிப்பாக்கள் மிகுதியாகும்.

ஒத்தாழிசைக் கலி உறுப்புக்களில் முதலில் அமைவது தரவு. இப்பகுதியில், தொடக்கம் குறிப்பாகத் தோற்றிய பின் தாழிசைகளில் கருத்துக்கள் தெளிவாகிக் கேட்போர் வயமாகித் தாழிசை என்ற பெயருக்கொப்பத்தாழுமாறு ஆகித் தனிச் சொல்வழியாகச் சாறு போற்பிழிந்திறுகி, சுரிதகமாகிய முடிப்புப் பகுதியில் சுரிந்து முடியும்.

இவ்வகையில் தரவு தோற்றுவாய்ப் பகுதியாக அமைகிறது. தாழிசை கருத்துக்களை மும்முறை தெளிய விளக்குவதற்குத் தம்மில் ஒத்து மூன்றாய் வந்து கருவாக இருந்த தொடக்கத்தை மேலும் விரிவடையச் செய்கிற கருத்துப் பகுதியாக அமைகிறது. தனிச்சொல் நடுப்பகுதியையும், இறுதிப் பகுதியையும் இணைக்கிறது. சுரிதகம் முடிப்புப் பகுதியாக அமைகிறது.

எட்டுத்தொகை நூல்களில் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறு நூறு, அகநானூறு ஆகிய அகப்பொருள் இலக்கியங்கள் ஆசிரியப்பாவால் அமைய, கலித்தொகை செய்யுட்கண் மட்டும் இவ்வாறு நாடகப் புறவடிவம் ஏய்ந்துள்ளன.

கலித்தொகையின் எந்தப் பாடலைப் படிக்கும் போதும் ஒரு சிறந்த சிறுகதையைப் படித்த உணர்வோ, அல்லது ஓர் உயர்ந்த நாடகத்தை அனுபவித்த உணர்வோ ஏற்படுவதையாரும் உணரலாம் என்று கூறி பெரும்பாலான கலித்தொகைப் பாடல்களின் துறைக்குறிப்பே ஒரு சிறு கதைக்கான கதைத்திட்டம் போலத்தான் காணப்படுகின்றது என்று விளக்கி தமர்வரைவு மறுத்துழித் தோழி தாயார்க்கு அறத்தோடு நிற்ப, அவள் நாற்றாய்க்கு அறத்தொடு நிற்ப என்று காட்டுகள் பல கூறுவர். ஆதலின் கலித்தொகைப் பாட்டுகள் கதைப்பாங்குடைய நாடக இயல்பின என்பது போதரும். இதனை 'முன்னும் பின்னும் உள்ள நிகழ்ச்சிகளை விடாமல் கூறி' இடையே உணர்ச்சி மிக்க பகுதியையும் அமைத்துக் கதைப் போக்கில் காட்டுவது நாடக நெறி என்பர். இவ்விதம் அமையக் கலித்தொகை நாடகப்புற வடிவம் ஏற்றதாய் உள்ளது.

படிப்பதற்குரிய நாடகங்களில் சொற்களால் சூழ்நிலைகள் புனைந்து காட்டப் பெறுதல் வேண்டும். கலித்தொகை அகப் பொருளாய புலனெறி வாழ்வையே பொருளாகக் கொண்டது. பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் என்னும் முறைமையில் தொகுக்கப் பெற்றது. புலனெறி வழக்கிடைப் பயின்றவை, முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் எனப்படும். முதற்பொருள் நிலமும், பொழுதும், கருப்பொருள் என்பது மக்கள், பறவை, விலங்கு, ஊர், பூ, மரம், உணவு, யாழ், பண், தொழில் என்பனவாகும். புணர்தலும், இருத்தலும், இரங்கலும், ஊடலும், பிரிதலும் உரிப்பொருளாகும். இவற்றில் முதற்பொருளையும் கருப்பொருளையும் காட்சிப் பொருளாகவும், உரிப் பொருளைக் கருத்துப் பொருளாகவும் விளக்கியுரைப்பர்.

உலகியலும், புனைந்துரையும் விரவியதே புலனெறி வழக்கம் என்பதும், அதிலும் அதனைப் பாடுவதற்கு குறிப்புரிமையாக முதலில் கூறப்படுவது கலிப்பாட்டேயாகும் என்பது,

நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
படல் சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபாட் டாயிரு பாவினும்
உரிய தாகு மென்மனார் புலவர்

என்ற தொல்காப்பிய நூற்பாவால் உணரலாம்.

இவ்வாறு அமைந்த பின்புலம் பற்றி இத்தொகையின்கண் ஐந்திணையின் கருப்பொருள்களின் இயல்புகளும் ஆண்டு வாழும் மக்களின் பெற்றிமைகளும் கிழியில் எழுதிக் காட்டினாலொப்ப அழகுறத் தெளிந்து தோன்றுகின்றன என்பர்.

நாடகங்களில் பாத்திரங்களின் உரையாடல் உயிர்நாடி போன்றது என்பர். ஏனெனில் காப்பியம், புனிதம் ஆகியவற்றில் கிளத்தல் முறையில் கதை கூறுவர். நாடகத்தில் நடிப்பு, உரையாடல்களின் மூலம் கதை கூறப்படும். அதுவும் அகத்திணை ஒழுக்கங்களில் ஒரு கருத்தை ஒருவர்க்கொருவர் கட்டுரைத்துச் சொல்லுதலென்பது ஒரு முதன்மையான நிகழ்ச்சியாகும். இக்கருத்தைபற்றிச் சொல்லிய சொல்லும் வியங்கொளக்கூறு எனக் கலித்தொகையிலும் ஓரிடத்தில் (க கூ நூ, க க) நுதலுவதாயிற்று. இங்ஙனம் பயன்படும்படி கட்டுரைக்கும் முறையில் இந்நூல்களில் பிற ஆசிரியப்பாவில் அமைய, கலித்தொகை மட்டும் ஒருவர்க்கு ஒருவர் கட்டுரைத்துச் சொல்லுதற்கேற்ப ஓரோசை கனத்து தொடங்கிய பின் படிப்படியாக மெல்லோசையாகி மெலியும் தருவாயில் மற்றோர் ஓசை மறுபடியும் கனத்து ஒலித்து செல்லும் பாங்குடைய இயல்பாகவே ஓசை நயம் சார்ந்து நிற்கும். துள்ளலோசையுடைய கலிப்பாவால் இயன்றதாகும். ஏனைய எட்டுத்தொகை நூல்களில், தலைவன் கூற்று, தலைவி கூற்று,

தோழிகூற்று என்றே அமையும். கலித்தொகையில்,

"கூற்று மாற்றமும் இடையிடை மிடைந்தும்
போக்கின் றாகலுறழ்கலிக் கியல்பே"

என்று, உரையாடல் வகையில் ஒருவர் ஒன்று கூறுவதற்கு மறுமாற்றம் மற்றொருவர் கூறிச்சென்று பின்னர் நின்றது" என்று பேராசிரியர் உரை கூறுவதற்கொப்ப உறழ்கலியில் அமைந்துள்ளது.

தலைவி

"ஏஎ! இஃது ஒத்தன், நாண் இலன் - தன்னொடு
மேவேம் என்பாரையும் மேவினன் கைப்பற்றும்"

தலைவன் பதிலும், தலைவி வேட்கை மறுத்து உரைத்தலும்!

"மேவினும், மேலக்கடையும், அஃது எல்லாம்
நீ அறிதி; யான் அஃது அறிகேல்லேன்; பூ அமன்ற
மெல் இணர் செல்லாக்கொடி அன்னாய்! நின்னையான்
புல் இனிது ஆகலின், புல்லினென். - எல்லா!
தமக்கு இனிது என்று, வலிதின் பிறர்க்கு இன்னா
செய்வது நன்று ஆமோ மற்று?"

மகளிரை வலிதிற் புணர்தலும் அறநூல் வழக்கு எனத் தலைவன் மொழிதல்

"சுடர்த்தொடீஇ போற்றாய் களை, நின் முதுக்குறைமை
போற்றிக் கேள்!
வேட்டார்க்கு இனிது ஆயின் அல்லது, நீர்க்கு இனிது என்று
உண்பவோ, நீர் உண்பர்?
செய்வது அறிகல்லேன்; யாது செய்வேன் கொலோ-
ஐவாய் அரவின் இடைப்பட்டு, தைவாரா?
மை இல் மதியின் விளக்கும் முகத்தாரை
வெளவிக்கொளலும் அறன் எனக் கண்டன்று"

கலித்தொகை 62ஆம் பாடற்பகுதி இவ்வாறு அமைந்தமைக்கு ஒரு சான்றாகும்.

நாடகங்களில் பேச்சு மொழி இடம் பெறும்.

இதனை,

"சேரி மொழியாற் செவ்விதிற் கிளந்து
தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றின்
புலனென மொழிப் புலனுணர்ந் தோரே"

என்று தொல்காப்பித்தில் நாடக இலக்கிய வகையாகக் கருதப்படும். 'புலன்' 'வனப்பில்' குறிப்பிடப்படுகிறது.

எட்டுத்தொகையில் பிற நூல்கள் அன்பின் ஐந்திணையையே பாடுகிறது. அவ்வாறு அல்லாமல் கலித்தொகையில் நடப்பியலை ஏற்றுக் கைக்கிளை, பெருந்திணை பற்றியதாகவும் பாடப்பட்டுள்ளது. எல்லாத் தரப்பினரும் பாத்திரங்களாக இடம் பெறுகின்றனர். மருதக்கலியில் கூலி – குறளன் (கலி. 94) உரையாடலும் இடம் பெற்றுள்ளது. ஆகவே, அவ்வப் பகுதியில் மக்கள் பேசும் மொழிகளும் இடம் பெற்றுள்ளது. ஆதலின் "பிற அக நூல்களில் காணப்பெறாத 'நீன்றீத்தை' (93) 'போசீத்தை' (93) 'பாடித்தை' (130) 'இஃதொத்தன்' (84) போன்ற சொற்கள் இதில் இடம் பெற்றுள்ளன" என்பர் அவ்வப்பகுதியில் வாழும் மக்கள் ஆண் பாலராயின் 'ஏடி' என்று பெண் பாலரை விளிப்பதும், பெண் பாலாராயின், எல்லா 'ஏடா' 'ஏஎ' என்னு ஆண் பாலரை விளிக்கும் பேச்சு மொழிகளும், பேசுந்தமிழ் பேசுநர்க்கேற்ப அமையுமென" குறிப்பிடப்படுவது போல், கலித்தொகையில் மொழிகள் இடம் பெற்று நாடக இலக்கண நெறி கூறும் புலன் வனப்பினதாய்ப் பொலிகிறது.

கலித்தொகைப் பாட்டுக்களில் ஒத்தாழிசைக் கலியுறுப்பாகிய தனிச்சொல் வந்து இரண்டு கருத்துக்களைத் தொடர்புபடுத்தி இணைக்க உதவுகிறது. அவ்விதம் 'என ஆங்கு', 'என இவள்', 'எனநின்', 'அதனால்', 'இனி யான்', 'என நீ', 'என

நாம்', 'ஆங்கு அதை', 'எனப்பாடி', முதலிய சொற்கள் இடம் பெற்றுள்ளன. 'சிலப்பதிகாரம் நாடக நூலாதலின் காட்சிகளுக்கிடையே தொடர்பு சுட்ட, ஒரு முழுப் பாடல் கொடுத்துக் காலம் நீட்டாது தனிச்சொல்லைப் பயன்படுத்தினர். கதைப் போக்கின் ஓட்டத்தை, வேகப்படுத்தினர். 'உரையிடையிட்ட' என்பதற்குச் 'சொல்லிடையிட்ட' என்பதுவே பொருள். (உரைசொல்) என்பர். ஆங்கு, அதனால், அவளுந்தான், அவனுந்தான், அவரை, அவ்வழி என்று அதில் பயிலும் சொற்களை உரைச் சொல்லாகச் சுட்டுவர்.

தனிப்பாட்டுக்களாக விளங்கும் கலித்தொகையில் உரைசொற்கள் இடம் பெற்றிருப்பது நாடகப் பயன் விளைத்தற் பொருட்டேயாம். இவ்விதம் எட்டுத்தொகையின் பிற நூல்களில் பயிலாததும் ஒப்பு நோக்க, கலித்தொகைச் செய்யுட்களின் நாடகப் போக்கைத் தெளிவுறுத்தும்.

இன்றைய நாடகங்களில் தனி மொழி பாத்திரம் தன்னைத் தானே ஆராயும் ஆராய்ச்சியாகும். எல்லை மீறி அமைந்தால் அலுப்புத் தட்டுமாதலின் அளவு மீறாது அமைத்தல் வேண்டும். "தமிழ் மொழியில் முன்னர் இருந்த நாடகங்களில் தனிமொழி உண்டா என்பது நாம் அறிய முடியாத ஒன்று" என்பர்.

தனி மொழி என்பது பாத்திரங்களின் பண்பை எண்ண வெளிப்பாடு மூலம் விளக்குவதற்கு நாடக ஆசிரியரின் மேற்கொள்ளும் உத்தியாகும் இவ்வுத்தி கலித்தொகையில்,

"அறனும் அது கண்டற்றாயின், திறன் இன்றி,
கூறும் சொல் கேளான், நலி தரும்; பண்டு நாம்
வேறு அல்லம் என்பது ஒன்று உண்டால் அவனொடு
மாறு உண்டோ, நெஞ்சே! நமக்கு?"

என்று புணர்ச்சிக்கு உடம்பட்டுத் தலைவி நெஞ்சோடு கூறுதலாக அமைந்துள்ளது. இப்பாடலேயன்றி 84,87,94,105 ஆகிய

பாடல்களிலும் முறையே தலைவி தன் நெஞ்சு அழிந்து கூறுதல் 'தலைவி நெஞ்சோடு கூறல்', 'அவள் செலவு நோக்கிக் குறளன் தன்நெஞ்சிற்கு உரைத்தலும்', 'தோழி தன் நெஞ்சோடு தலைவி விரும்பக்கூறியது' என்று தமிழ் மொழிகள் அமைந்துள்ளன.

இதனால் நாடக ஆசிரியன் நேர் நின்று பேச இயலாத இடங்களில் இவ்விதம் தனிமொழி மூலம் பாத்திரங்களின் பண்பை வெளிப்படுத்தும் உத்தி கலித்தொகைச் செய்யுள் நாடகத்திறன்களின் ஒன்றாகவும் அமைந்திருத்தல் வெள்ளிடை மலை, ஆதலின் தமிழ் மொழியில் முன்னர் இருந்த நாடகச் செய்யுட்களில் தனி மொழி உண்டு என்பது போதரும்.

'மெய்ப்பாடு' என்பது நாடகத்திறன் பற்றிய செய்தியாகும். கலிதொகைக்கு நச்சினார்க்கினியர் உரையானது, செய்யுள் தோறும் மெய்ப்பாடும் பயனும் தெரிவித்து இயன்றுள்ளது. இவ்வாறு இயன்றமை கொண்டு கலித்தொகையின் நாடகத்திறன் உணர்த்தப்படுதல் தேர்தற்பாற்றாம்.

இவற்றால் கலித்தொகைச் செய்யுட்கள் நாடக அக வடிவம் தழுவிய நிலை புலனாகும்.

இத்தகு செய்திகள் கலித்தொகை நாடகத்திறனையும் அவை நாடகச் செய்யுட்களே என்பதனையும் கூறாநிற்கும்.

**சான்றெண் விளக்கம்**


1. தொல்காப்பியம், உவமையியல், 37.
2. செய்யுளியல். 172.
3. அத்திணையியல். 56.
4. த.செயகாந்தன், (முன்னுரை) சினிமாவுக்குப் போன சித்தாளு, செப் 1972. பக்7.
5. வ.சுப.மாணிக்கம், 'சிலப்பதிகாரத்திறன்', இரட்டைக்

காப்பியங்கள், திசம்பர் 1960. பக்40–41.
6. தொல்காப்பியம், அகத்திணையியல், 56.
7. இரா.தண்டாயுதம், சங்க இலக்கியம், நவ 1978, பக்.301, 306.
8. மு.வரதராஜன், (முன்னுரை) குறுந்தொகைச் செல்வம், சூலை 1958.
9. ந.மு.வேங்கடசாமி நாட்டார், கலித்தொகைச் சொற்பொழிவுகள், மார்ச்சு 1940, ப–8.
10. தொல்காப்பியம் அகத்திணையியல், 56.
11. ந.மு.வேங்கடசாமி நாட்டார், கலித்தொகைச் சொற்பொழிவுகள், சனவரி 1967, ப. 10–11.
12. இளவழகனார், கலித்தொகைச் சொற்பொழிவுகள், சனவரி 1967, ப. 24.
13. இளவழகனார் கலித்தொகச் சொற்பொழிவுகள் சனவரி 1967 ப 25–26.
14. தொல்காப்பியம், செய்யுளியல் 149.
15. தொல்காப்பியம், செய்யுளியல் 233.
16. மா.இராசமாணிக்கனார், தனிமொழி இலக்கிய வரலாறு, நவம்பர் 1976, ப. 42.
17. பரிதிமாற்கலைஞர், நாடகவியல், நூ. 66, 70.
18. வ.சுப.மாணிக்கம், சிலப்பதிகாரத்திறன், இரட்டைக் காப்பியங்கள், திசம்பர்–1960, பக். 426.
19. அ.ச.ஞானசம்பந்தன், இலக்கியக்கலை, சூலை–1964, ப. 348.
20. கலித்தொகை 62.

# தனிமனிதனின் சமுதாயப் பங்களிப்புகள்

முனைவர் சு. குழந்தைவேல் பன்னீர்செல்வம்

சமுதாய உறுப்பினராகிய ஒவ்வொருவரும் சிறப்புற வாழத் தன்னை செம்மைப்படுத்திக் கொள்ள வேண்டும். தனிமனிதன் ஆதிகாலத்தில் வாழ்ந்ததுபோல் தனியாக வாழ்வானேயானால் சமுதாயம் உருவாகியிருக்காது. சமுதாயம் என்னும் கூட்டுவாழ்வு இல்லையென்றால் முன்னேற்றங்களும், நாடும், நகரும், ஊரும், ஊர்தியும், விண்வெளிப்பயணமும் பெற்றிருக்க முடியாது. எனவே, தனிமனிதன் சமுதாயத்துக்கும், சமுதாயம் தனிமனிதனுக்கும் கட்டுப்பட்டுத் தழுவி வாழும் நல்வாழ்வையே பண்பட்ட திருந்திய மக்களினம் விரும்பும். இம்மக்களுக்குத் தோன்றும் தடைகள் அனைத்தும் சூரியனைக் கண்டவிடத்து மறையும் பனிபோல் மறைந்துப்போகும்.

சமுதாயத்தின் முக்கியநிலை சமுதாயத்திற்கும் தனிமனிதனுக்கும் இடையே காணப்படும் உறவுநிலையாகும். தனிமனிதனைவிடச் சமுதாயம் முற்பட்டது; மேலும் நீண்டநாள் நிலைப்பது. மனிதனைப் போன்ற கால எல்லை சமுதாயத்திற்கில்லை. இருப்பினும் மனிதர்களில்லாமல் சமுதாயம் என்ற ஒன்றில்லை. மனிதனே சமுதாயத்தை உருவாக்குகிறான் என்றாலும் சமுதாயம்தான் தனிமனிதனைப் பண்படுத்த முடியுமென்பதை, மனிதர்க்கும் சமுதாயத்திற்கும் இடையிலான E\® p L6Q 1Tб m 'நாம்' என்னும் உணர்வும் ஒன்றுபட்டுச் செயலாற்ற வேண்டும் என்பதும் மனிதனைச் சமுதாயஞ் சார்ந்தவனாக்குகிறது. மனித இனப் பொது நன்மையின் மீதுதான் சார்ந்து இருக்கிறோம் என்னும் உணர்வினால் மக்கள் நடத்தைகளை மேற்கொள்கின்றனர். அதனால்தான் சமுதாயக் கட்டுப்பாடும் சமுதாயப் பொறுப்புணர்வும் ஏற்படுகின்றன.

இம்மனப்பாங்கினால் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளவும் சமுதாயத்தின் நன்மைக்கருதி தன்னுடைய பொறுப்புணர்வுகளை உணர்ந்தும் பொதுக்குழும உணர்ச்சியை வளர்த்துக் கொள்ள பிறருடன் கூடி இணைந்து செயலாற்றும் பாங்கையும் வளர்த்துக்கொள்கிறான். சமுதாயத்தில் அவரவர் கடமையில் செயலாற்றும்போது அவர்களுக்குப் புகழைத் தேடித் தருவதோடு, அவர்களைப் பின்பற்றி மனித சமுதாயம் செல்லவேண்டிய உண்மைகளையும் வற்புறுத்தும். ஒருசிலர் விரும்புவது போன்று புகழே வேண்டுமெனச் செயலாற்றினால் அவருடைய காலத்தில் வேண்டுமானால் புகழாக அமையலாம். காலவெள்ளத்தில் அப்புகழ் நீங்கிவிடும். எனவே உண்மையில் தன்னையுணர்ந்து சமுதாயத்தையறிந்து சமுதாயத்துக்குத் தாமாற்றவேண்டிய கடமையையுணர்ந்து செயலாற்றுபவரே காலத்தை வெல்லும் புகழ்பெற்று வாழ்பவராவர். ஒருவேளை அவர் காலத்தில் வாழும் மனிதநேயம் அக்கடமை உணர்ச்சிகளுக்குச் சிறப்பைத் தரவில்லையெனினும், வழிவழியாக வளரும் மனித சமுதாயம் அதற்குரிய சிறப்பினைத் தரத்தயங்குவதில்லை. சமுதாயத்திற்குக் கடமையாற்றுபவர்கள் இதற்காகப் பின்வாங்குவதுமில்லை.

**தனிமனிதனும் சமுதாயமும்**

ஒரு நாட்டில் 'யாவரும் நம்மவரே' எனவும், 'நான்', 'எனது' என்றுள்ள, இருவகைப்பட்ட மக்களில் எப்பண்பாட்டின்வழி வாழ்கிறார்களோ அதன்வழியே அந்நாட்டின் உயர்வும் தாழ்வும் அமையும், ஒரு நாடு சிறந்திருக்கிறது எனில் அச்சிறப்பு, மக்கள் மேற்கொள்ளும் உண்மை வாழ்வைதான் பற்றும் என்பதை உணரவேண்டும். வெறும் போர்க்கருவிகளும் பிற மாறுபட்ட நிலைகளும் நாட்டை நாடாக்க வல்லன அல்ல. அவை ஒருவேளை நாட்டைப் பாதுகாக்க அமைந்த துணைக்கருவிகளாக – சாதனங்களாக – இருக்கலாம். சில தனிமனிதர்கள் இவற்றைக் கணக்கிட்டு தம் ஆணையை விரிவுப்படுத்தித் திட்டமிடுவர். உண்மையில் நாடு வாழ்கிறது என்றால், அதில் வாழும் மக்கள் – தனித்தனியாக ஒவ்வொருவரும் – செம்மை பெற்றவராக இருக்க வேண்டும்.

கல்விதான் சமுதாயத்திலுள்ள ஏற்றத்தாழ்வைப் போக்க ஒரேவழி. கல்வித்துறையில் நம் சமுதாயம் இன்றும் இணைந்து முன்னேற தனிமனிதர் ஒவ்வொருவரும் கற்றுத் தெரியும் வகையில் இத்துறையினை விரிவு செய்யவேண்டுவது அடிப்படையும் அவசியமும் ஆகும். சற்று ஆராய்ந்தால் சமுதாய வாழ்விற்கு அறிவே அடிப்படை. ஆனால் அதை உணராது, கற்றவர் சற்று உயர்ந்துவிட்டோம் என்று பெருமை கொள்வது சமுதாய வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் மாறுபட்டது ஆகும். அதனால்தான் சமுதாயத்தில் கல்வியால் – அறிவுடைமையால் ஏற்றத்தாழ்வு இருத்தலாகாது என எல்லா நாட்டினரும் தனிமனிதனைத் தன்னோடு பிணைத்துச் செல்வதைக் காணமுடிகிறது. இனம் தெரியாத ஒரு மேதை கண்டுபிடித்த எளிய கருவியாகிய கலப்பைதான் வேளாண்மை யுகத்தையே உருவாக்கியது. 18ம் நூற்றாண்டின் இறுதியில் கண்டுபிடிக்கப்பட்ட நீராவி இயந்திரந்தான் தொழில்யுகத்தைத் தோற்றுவித்தது. 20 ம் நூற்றாண்டின் இடையில் படைக்கப்பட்ட கணிப்பொறிதான் பிரம்மாண்டமான விளைவுகளுடன் கல்வியுகத்தை உருவாக்கியது.

தனிமனிதர்கள் மனித வரலாற்றையே மாற்றும் சாதனைகளைச் செய்திருக்கிறார்கள். தனிமனிதர்கள் முக்கியமானவர்கள். விடுதலை பெற்ற இந்திய நாட்டில் பசுமைப்புரட்சி, வெண்மைப்புரட்சிக்குப்பின் இடம்பெற்றது தோல்துறையில் ஏற்பட்ட மாநிறப்புரட்சி (Brown Revolution). இம்மூன்றிலும் முக்கியப் பொறுப்பேற்றிருந்தவர்கள் முறையே டாக்டர் M.S. சுவாமிநாதன், டாக்டர் A. சூரியன், டாக்டர் T. நாயுடம்மா ஆகியோரவர். அணுஆயுதம், விண்வெளி, ஏவுகணை ஆகியத் துறைகளில் நாம் முன்னேறிய நாடுகளுடன் ஒப்பிடத்தக்க வளர்ச்சியைப் பெற்றுள்ளோம். உலகின் மிகப்பெரிய அணைகள் சிலவற்றை இந்தியப் பொறியாளர்கள் உருவாக்கியுள்ளனர். அறிவியல், தொழில்நுட்பத்துறைகளில் பட்நாகர், ஹோமிபாபா, திருமலை அய்யங்கார், A.P.J. அப்துல் கலாம் போன்ற தனி மனிதர்கள் செய்த சாதனைகள் சமுதாயத்திற்கு நலம் பயப்பதாக அமைந்தது.

**சமுதாய அமைப்பில் குடும்பம்**

சமுதாயத்தில் முக்கிய அங்கமாக இருப்பது அமைப்புகள் என்னும் நிலையங்களாகும். சமுதாயத்திற்கு நன்மை பயப்பதற்காகக் குறிப்பிட்ட சில நோக்கங்களின் அடிப்படையில் அல்லது தனி நலத்தையோ குறியிலக்காகக் கொண்டு அதனை அடைய முயலும் உறுதியான முறைக்கு அமைப்பு அல்லது நிலையம் என்று பெயர். மேலும் சமுதாயமரபு, கோட்பாடு, சடங்குமுறை ஆகியவற்றின் வடிவம் கூட அமைப்பு அல்லது நிலையமாகும். எனவே சமுதாயத்தையும் மக்களையும் சில குறிக்கோள்களால் இணைப்பதாக அமைவதுடன் சமுதாயத்தின் செயலாக்கங்களுக்கு அடிப்படையாக இச்சமுதாய அமைப்புகள் அமைகின்றன. பண்பாட்டின் நடத்தைகளைச் சமுதாய அமைப்புகளே ஒன்றுபடுத்துகின்றன.

சூழ்நிலைக்கேற்ப மனிதர்களின் நடத்தையைக் கட்டுப்படுத்தி அறக்கோட்பாடு, அறிவு, நடத்தையின் வடிவம் ஆகியவற்றில் தொடர்ச்சியை நிலைநாட்டிச் செயல்படுகின்றன. இதனைக் குடும்பம் என்ற எல்லைக்கோடு வரையறுக்கிறது. குடும்பம் என்பது பாலின உறவுகளால் வரையறை செய்யப்படுவதையும், குழந்தைகளைப் பேணி வளர்க்கும் உரிமையும் உடையது. "குழந்தைபேறுள்ள பெண்ணும் அவர்களைப் பராமரிக்க ஆணும் உள்ள அமைப்பே குடும்பம்" என பைசான்ஸ் என்பவர் விளக்கம் கொடுக்கிறார். குடும்பத்தில் ஆண், பெண் இடையேயான பாலுணர்வு உறவு அவசியமெனினும் குழந்தைகளைப் பெற்று வளர்ப்பதற்கே குடும்பமெனும் சமுதாய அமைப்பு உள்ளது.

**இயக்கமும் முன்னேற்றமும்**

எந்த ஒரு இயக்கமும் உருவாகுவதற்கு அவ்வப்போதைய நிலைமை பற்றிய அதிருப்தியே அடிப்படையாக அமைகிறது. தன்னுடைய எதிர்பார்ப்புக்குப் பரவலான ஆதரவு கிடைக்குமானால் அது இயக்கமாக உருவெடுத்து அதன் காரணமாக பல நிறுவனங்கள் உருவாகி இருக்கின்ற நிலைமையில் மாற்றமும் வளர்ச்சியும் அடைவது ஒரு இயக்கத்தின் குறிக்கோளாகும்.

முன்னேற்றப் பயணத்தில் ஒரு இயக்கம்,

1. பொருளாதாரம்
2. அரசியல்
3. சமுதாயம்

ஆகிய மூன்று வகையான மேம்பாட்டிற்குத் துணைபுரியும் பொருளாதார முன்னேற்றம்தான் பொதுவாக நம்மால் பேசப்பட்டு அதற்கு அளவுகோளாக வாழ்க்கைத்தரம், தனிநபர் வருமானம், மொத்த தேசிய உற்பத்தி போன்றவை உருவாக்கப்பட்டது. சமீபகாலங்களில்தான் மானிட மேம்பாட்டிற்குப் பொருளாதார வளர்ச்சியின்றிச் சமுதாய, அரசியல் முன்னேற்றமும் தேவை என்று உணரப்பட்டது.

அரசியலமைப்பு என்னும் நிலையில், "அரசு என்பது சமுதாயத்தின் ஒரு முக்கிய அங்கமாக விளங்குகிறது. அரசு என்பது குடும்பம் ஆகியவற்றின் கூட்டிணைப்பு" என்கிறார் அரிஸ்டாடில். அக்குடும்பங்களும் கிராமங்களும் முறைப்படுத்தப்பட்ட – நெறியுடைய முழுமையான வாழ்க்கையைக் குறிக்கோளாகக் கொண்டிருக்கும் என்று அவர் மேலும் கூறுகிறார். ஆனால் தற்காலத்தில் அரசு என்பது வெறும் கிராமங்களை மட்டும் குறிக்காது. லாஸ்கி என்னும் சமுதாயவியல் அறிஞர், "அரசு என்பது எல்லைக்கோடுகளைக் கொண்ட சமுதாயம், சமுதாயத்தின் அனைத்து அமைப்புகளைவிட அதிக ஆற்றலும் சக்தியும் வாய்ந்தது" என்று கூறுகிறார். இவரின் விளக்கமே பெரும்பாலோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

அரசு என்பது நாகரீகம் அடைந்த "ஒரு சமுதாயத்தின் அரசாங்க அடிப்படைச்சட்டம். குடிமக்கள், மக்கள் ஒருவரோடு ஒருவர் கொண்டுள்ள தொடர்புகள். இவற்றை வகுத்துக்காட்டும் நீதிகள், சமுதாயநிலைகள் அவற்றின் குறிக்கோள்கள் என்பன பற்றிக் கூறும் ஓர் அறிவுத்துறையாகும். தான் வாழும் காலத்தையும் வெளிப்படுத்தாமல் செல்லமுடியாது. சமுதாயத்தின் முக்கிய

நிறுவனங்களில் ஒன்றான அரசு மக்களிடையே ஒற்றுமையையும் தோழமையையும் வளர்த்து, நல்வாழ்விற்கான சூழ்நிலைகளை உருவாக்கிக் கொடுக்க சமுதாயத்தோடு நெருங்கிய தொடர்புடையது". "குடியரசு நாடு, இந்நாட்டு மக்களால் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்களின் நலனுக்காக மக்கள் உறுப்பினர்களால் ஆளப்படும் அரசு".

நம் நாட்டில் மக்கள் தங்கள் வாக்குரிமையால் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் குடியாட்சி முறையே நிலவுகிறது. மக்களால் தேர்ந்தெடுக்கும்வரை ஆளும் கட்சியின் குறைகளைச் சுட்டிக்காட்டி, மக்கள் நலனே தம் குறிக்கோள் எனக்கூறிப் பதவியை அடைந்தவுடன் மக்களையும் வாக்குறுதிகளையும் மறந்துவிடுகின்றனர். "மக்களிடையே ஒற்றுமையையும் தோழமையையும் வளர்க்கவும் மற்றப் பொதுத் தேவைகளுக்கும், ஒருவருக்கொருவர் உதவி புரிந்து கொள்ளவும் மனிதன் முழுமையடைவதற்கு இயல்பான சூழலை ஏற்படுத்திக் கொள்ளவும் இயன்ற வழிகளில் நல்வாழ்க்கை அளிப்பதே அரசின் குறிக்கோளாகும்".

மக்களாட்சியில் ஒரு நாட்டின் தலைவிதியை நிர்ணயிப்பவர்கள் அரசியல் தலைவர்களே என்ற நிலை ஏற்பட்டுள்ளது. பொது மக்களாகிய வாக்காளர்கள் அரசியலில் இருந்து ஒதுங்கி நிற்பதும், புறக்கணிப்பதும், அலட்சியப்படுத்துவதும் பிரச்சனைகளைத் தீர்க்காது. தேர்தல்களின் விளைவுகட்கு வாக்களித்தவர்கள்தான் காரணம் என்பதில்லை. வாக்களிக்காதவர்களின் அலட்சியம், அறியாமை ஆகியவையும், காரணங்களாகின்றன. பல தேர்தல்களில் 60 சதவீதம் மக்கள் வாக்களித்து, மொத்த வாக்குகளில் 35 சதவீதம் பெற்ற கட்சி பெரும்பான்மை பெற்று ஆட்சிக்கு வருகிறது. வாக்களிக்காத 40 சதவீதம் மக்கள் அனைவரும் ஒரு முனைப்பாக நின்றிருந்தால் வேறொரு ஆட்சி அமைத்திருக்கலாம். அதைத்தவிர்த்து 35 சதவீதம் பெற்றவர்களை ஆட்சியில் அமர்த்திய பொறுப்பு வாக்களிக்காத இந்த 40 சதவீதம் மக்களையேச்சாரும், இந்த நிலையை மாற்றுவதற்கு மக்களுந் தமது சக்தியில் ஒரு நம்பிக்கையை உருவாக்க வேண்டும்.

நமது பண்பாட்டில் ஓர் அடிப்படைக் குறைபாடு உண்டு. நல்லவர்கள் என்போர் நன்மை செய்பவர்கள், தீமை செய்யாதவர்கள் என்பது சமுதாயத்தின் பார்வையாகும். நல்லவர்கள் என்பதற்கு இந்த இலக்கணம் போதாது. நல்லவர்கள் தீமையை எதிர்க்க வேண்டும். சான்றோர் இருக்கும் ஊரில் சரிபார்த்து நடக்க அவர்கள் அனுமதிக்கமாட்டார்கள் என்ற காரணத்தினால்தான், தன்கணவன் கொலையுண்டதுகேட்டு, வெகுண்டெழுந்த கண்ணகி,

"சான்றோரு முண்டுகொல்! சான்றோரு முண்டுகொல்"

என்ற கேள்வி எழுப்புகிறாள். நமது சமுதாயம் இன்று தீமையை வேடிக்கைப் பார்த்து நமக்கேன் வம்பு என்று நினைத்து ஒதுங்குகிறது. நம் பாரம்பரிய நம்பிக்கையான, நன்மை நசிய தீமை எப்பொழுதெல்லாம் வலிமைபெறுகிறதோ அப்பொழுதெல்லாம் ஆண்டவன் அவதாரமெடுத்து தீமையை அழித்து நன்மையை நிலைநாட்டியதை இன்று நடைமுறையில் காணமுடியாது. ஒவ்வொரு நாளும் காலையில் செய்தித்தாள்களைப் படிக்கும்போது நாட்டில் நடைபெறும் தீயசெயல்கள், ஏமாற்றுதல்கள், துரோகங்கள், ஊழல்கள் போன்றவற்றைக் காணும்பொழுது நம் கண்கள் குளமாகின்றன

**நல்லாட்சிக்குக் கட்டாய வாக்கு அளித்தல்**

இந்தியா விடுதலைப்பெற்று 59 ஆண்டுகள் கடந்த நிலையில் குடியசுத் தத்துவத்தில் அரைநூற்றாண்டளவு பயிற்சி பெற்று, 10 தேர்தல்களைக் கண்டுள்ளது. தேர்தலின் முக்கியத்துவத்தை மக்கள் ஓரளவு அறிந்துள்ளனர். என்றாலும், நல்லது கெட்டது காணும் திறன்படைத்தவர்கள் யார் என்பதை பகுத்தாயாது, சமயப்பற்று போலவும் சாதிப்பற்று போலவும் அவர்கள் சார்ந்திருக்கும் கட்சிப்பற்று அவர்களுடைய முடிவை நிர்ணயிக்கின்றது. அவர்களிடம் எவ்வித வாதமும் எடுபடாது என்பதால், அவர்களை அப்படியே ஏற்றுக்கொள்வதுதான் முறையாக அமையும் அவர்களை விடுத்து, மற்றவர்களைப்பற்றி சிந்திக்க வேண்டும். மத்தியதர வகுப்பினர் நாட்டில் மிகுதியாக உள்ளனர். பலமும், பலவீனமும் இம்மத்தியதர வகுப்பினரிடமே உள்ளது. மக்களுக்கு

வழிகாட்டுபவர்களும், ஏயப்பவர்களும் பொறுப்புணர்வோடு நல்லதை வளர்த்து தீயதை தியக்க வேண்டும் என்று செயல்பட்டால் நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கமுடியும்.

வேட்பாளர்களின் வாழ்க்கை எப்படியிருக்க வேண்டும் என்பதை மக்களிடம் கேட்டு, தனிநபர் விருப்பத்திற்கேற்ப யாரும் போட்டியிடுபவர்களைத் தேர்ந்தெடுப்பதில்லை. எனவே, போட்டியிடுபவர்களில் நாம் எதிர்பார்க்கும் தகுதியுடைய ஒருவரை தக்கார் தகவிலார் என்பதை எடைபோட்டு தேர்ந்தெடுக்க வேண்டியது சமுதாயக் கடமை அதைச் செய்யத்தவறுவது சமுதாய விரோதச் செயலாகும். ஒரு குடிமகன் தன்னுடைய சமுதாயத்திற்காகச் செய்ய வேண்டிய புனிதமான கடமை வாக்களிப்பது ஆகும். ஆயினும் போட்டியிடும் வேட்பாளர்களில் பலர் அரசியல் தாழ்ச்சிக்குக் காரணமாக இருக்கிறார்கள். நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்னரே காந்திமகான், சுதந்திரம் கிடைத்தவுடன் காங்கிரஸ் கட்சியைக் கலைத்துவிட வேண்டும் என்றார். இராஜாஜி, அரசியலிலும் தேர்தலிலும் வரும் கொடுமைகளை நினைத்துப்பார்த்து 1922ல் தனது நாட்குறிப்பில் "சுதந்திரம் வந்தவுடனோ அல்லது அதன்பின் சற்று நீண்டகால அளவிலும்கூட இப்பொழுது இருப்பதைவிட நல்ல ஆட்சியையோ அல்லது இப்பொழுதினும் அதிக மனமகிழ்ச்சி தரும் சூழ்நிலையையோ அது தந்துவிடாது" என்பதை நாம் உணர வேண்டும்.

சுதந்திரம் வந்தபின் வரும் தேர்தல்கள், அவற்றைத் தொடரும் ஊழல்கள், அநீதிகள், செல்வத்தின் வல்லமையைப் பயன்படுத்தி இழைக்கப்படும் கொடுமைகள், திறமையில்லாத அரசு நிர்வாகம் ஆகியவற்றின் விளைவுகள் சுதந்திரம் கிடைத்தவுடன் நமது வாழ்க்கையை நரகத்திற்கு ஒப்பானதாக்கிவிடும். மக்கள் கண்ணியமான நீதியும், திறமையும், அமைதியும், நாணயமும் இருந்த பழைய அன்னியர் ஆட்சிபற்றி நினைத்துப் பார்க்கத் தொடங்கிவிடுவார்கள். அடிமைத்தனத்திலிருந்து நம்மை விடுவித்துக் கொண்டோம், நமது மானம் காக்கப்பட்டது.

என்பதுதான் நாம் அடையும் பயன்" என்று எழுதியுள்ளார். இராஜாஜி இப்படி நடக்கும் என்று அச்சப்பட்டார். அவ்வச்சம் சிறிது காலம் மட்டும் இருக்கும் என்று நம்பினார். ஆனால் அரசியல் தாழ்ந்துகொண்டே போகும் என்று எதிர்பார்த்திருக்கமாட்டார். அவர் தனது குறிப்பில் Correption, Inefficient Administration, Injustice போன்ற சொற்களைப் பயன்படுத்தியுள்ளாரே தவிர Criminal என்ற சொல்லைப் பயன்படுத்தவில்லை. அப்பின்னணியினர் அரசியலில் நுழைவார்கள் என்று அவர் எதிர்பார்த்ததற்கான அடையாளம் சிறிதும் அக்குறிப்பில் இல்லை.

இராஜாஜி அவர்கள் நாட்டுச் சுதந்திரத்தின் ஆரம்பக் காலத்தில் என்ன நடக்கும் என்று கருதினாரோ அதைக்கடந்த நிலையில் ஊழல், திறமையில்லா ஆட்சியைத் தாண்டி குற்றவாளிகள் நடத்தும் குடியரசாக நடைபோட்டுக் கொண்டுள்ளோம். 2002ம் ஆண்டு பிப்ரவரியில் நடந்த உத்திரப்பிரதேசத் தேர்தலே இதற்குச் சான்றாக அமையும். தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை உறுப்பினர்கள் 403 பேர். இவர்களில் கிரிமினல் வழக்குகளில் சம்பந்தமுண்டயவர்கள் 122 பேர். இவர்கள் மீது கொலை, கொள்ளை, கற்பழிப்பு, ஆள்கடத்தல் வழக்குகள் உள்ளன. பணத்துக்காகக் கொலை செய்பவர் என்று பெயர் பெற்ற தனஞ்சயசிங் 18 கிரிமினல் வழக்குகளோடு தேர்தலில் நின்று வெற்றிபெற்றுள்ளார். இவரை எதிர்த்துநின்று தோற்றுவிட்ட உமாகாந்த்யாதவ் மீது உள்ள கிரிமினல் வழக்குகள் 43. இவர்கள் இருவரும் அரசியல் கட்சிகளால் நிறுத்தி வைக்கப்பட்டவர்கள்.

ஊழலால் வளர்ந்தவர்கள், மோசடிக்காரர்கள், வன்முறையாளர்கள் ஆகியோரின் மக்கள் விரோதக்கூட்டு ஆங்காங்கே தளிர்விட்டிருக்கிறது. சில விடங்களில் அது தழைத்தும் இருக்கிறது. இதன்விளைவாக முந்நாட்களில் காவல் நிலையங்களுக்குப் பாதுகாப்பு வேண்டிச் சென்றவர்கள், இன்று இக்குழுக்களின் தலைவர்களிடம் சரணடைந்து 'நிவாரணம்' வேண்டிப் பரிதாபமாக நிற்கிறார்கள். அரிதாக இருந்த இந்நிகழ்வுகள் இன்று எங்கும் காணப்படுகிறது. அன்று, "அரசும் காவல்துறையும், ஆட்டுமந்தையைக் காப்பதற்காக வளர்க்கப்படும்

நாய்கள், சரியான பயிற்சி இல்லாத காரணத்தால் அவைகளே மந்தைக்குள் புகுந்து ஆடுகளைக் கொண்டு தின்னாமலிருக்க நாம் எவ்வாறு கவனம் செலுத்துவோமோ அதைப்போல ஜனங்களையே அழித்து விடாமலிருக்கும்படி நாம் பாதுகாக்க வேண்டும்" என்று போர்வீரர்களைப் பற்றி பிளாட்டோ குறிப்பிட்டார். மக்கள் ஆள்வோரிடத்தும் காவல்துறையினரிடத்தும் இருந்தால் மக்களுக்குப் பாதுகாப்பும், அமைதியும் ஏற்படும் என்பதில் ஐயமில்லை.

**சமுதாயம் அளித்த பண்பாட்டுக் கூறுகள்**

இன்றியமையாத பண்பாட்டினால்தான் ஒரு சமுதாயம் கட்டுக்கோப்பான ஒழுக்க முறையில் அமைந்து இயங்க முடியும். தனிமனிதன் மேம்பாடு அடைய பண்பாடு என்னும் அமைப்பில் பல்வேறு சக்திகளின் ஒத்துழைப்புத் தேவைப்படுகிறது. "பண்பாடு என்னும் சொல் பலதிறங்கொண்ட கூட்டுத்தொகுதியைக் குறிக்கும். அறிவு, நம்பிக்கை, கலை, நீதி, சட்டம், மரபு, சமுதாயத்தில் மனிதன் ஆற்றும் செயல்வலிமை ஆகியவற்றுடன் பழக்கம் என்பதும் உள்ளடக்கியதாகும்" என்கிறார் சர் எட்வர்ட் டைலர். எனவே, சமுதாயம் பெற்றெடுத்த பண்பாடு என்ற மரபு அடுத்தடுத்த தலைமுறை மக்களுக்குக் கொடுக்கின்ற வழக்கம், எண்ணம், செயல்திறன், சிந்தனை, பொருள்வகை அமைப்பு ஆகியவற்றை குறிப்பது ஆகும். பண்பாடு என்ற சொல்லுக்கு ஆங்கிலத்தில் Culture என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. அதற்கு ("Tillage cultivate improvement by training, An advanced state of civilzation), எனப் பொருள்கள் காட்டப்பட்டுள்ளன. "The state of being cultivated" என்ற பொருளும் உண்டு. இவற்றின் வழியில் சிறத்தல் என்பது புலனாகிறது.

சமுதாய வறுமை என்பது சமுதாயத்திலுள்ள மக்கள் அனைவரையும் பாதிக்கும் நிலையான தேவைக்குறைவு எனப்படும். பொருள்களின் பங்கீட்டிலும் பொருள் கிடைப்பதிலுமுள்ள நேர்மையின்மை ஆகியவை சமுதாய வறுமைக்குரிய காரணங்கள். சுதந்திர இந்தியாவில் அரசு எத்தனையோ திட்டங்களை வகுத்துச்

செயல்படுத்தியும் வறுமையை அகற்றிப்பொருளாதாரத்தில் தன்னிறைவுபெற இயலவில்லை. வாழ்வில் மிகச்சாதாரண அடிப்படைத் தேவைகளைக்கூட பூர்த்தி செய்யப்படாத நிலையில் மக்கள் இருப்பதற்கு ஆட்சியாளர்களே காரணம்.

**ஒழுக்கம்**

ஒவ்வொரு மனிதனுடனும் சமுதாயம், ஒரு சங்கிலிபோல் பிணைந்திருக்கிறது. "யாரொருவருடைய செயலும் மற்றவர்களுக்குப் பாதகமாக அமையாமல் எல்லோருக்கும் நன்மையடையும்படிப் பார்த்து, பிறரை மதித்து வாழ வேண்டும். யான், எனது என்ற பற்றோ, விருப்பமோ, ஆசையோ தோன்றும் அத்தருணத்திலேயே ஒருவனுக்கு மாறுபாட்டு உணர்ச்சியும் உண்டாகியிருக்க வேண்டும். "தான் என்றதுமே புறம் என்ற ஒன்று உண்டாவது இயற்கையே. இவ்விரண்டையும் பகுத்துணர்ந்து, தன்னையோம்பிப் பிறரையும் இவற்றால் ஓம்பி, இன்றேல் வெறுத்து ஒதுக்காது வாழப்பழகுவதே பண்பாடாகும். ஆதியில் தோன்றிய முதல் மனிதன் இப்பண்பாட்டினை அறியான். எனவே அவன் தனது என்பதை அறிந்தவுடன் மற்றவரை மாறுபாட்டுடன் நோக்கித் தன்வாழ்வைத் தனிமையில் வளர்த்துக்கொள்ள எண்ணற்றத் திட்டங்களைத் தீட்டியிருக்க வேண்டும். அத்திட்டங்களின் அடிப்படையில்தான் உலக வளர்ச்சிக்கும் நாகரிகப் பண்பாட்டு வளர்ச்சிக்கும் காரணமாக அமைந்தது." ஆகவேதான் 'தொழிலாளி' 'முதலாளி' என்ற வேறுபாடு இன்று நாடெங்கும் வளர்ந்துவிட்டது. அவ்விருவரையும் இணைத்து பண்பட்ட நல்ல உலக சமுதாயத்தை அமைப்பதற்கு இடைவெளியை இருவரும் சேர்ந்த – ஒன்றிய மனித சமுதாயம் என்ற உணர்வினை அவர்களுடைய உள்ளத்தில் மலரச்செய்திட வேண்டும். அரசாங்கம் எத்தனையோ சட்டங்களையும், விதிகளையும் செய்துகொண்டு வருகிறதென்றாலும், இவ்விருவேறு சமுதாயமும் தனித்தனி பாதையை நோக்கியே செல்கின்றன. இருவரும் இணையாத சமுதாயம் இல்லை என்ற உணர்வு அரும்பினாலன்றி அமைதி காணமுடியாது.

1999ஆம் ஆண்டு தமிழக சட்டமன்றத்து ஆளுநர் உரையில் மனிதக் கழிவுகளை மனிதன் சுமக்கும் அவலம் தமிழ் மண்ணிலிருந்து விரைவில் மறையும் என்று கூறப்பட்டதால் மனித இனத்தையே மாசுபடுத்தி வந்த ஓர் இழிவு மறைந்தது. தன்மான உணர்வுள்ள சமுதாயம் தலைகுனிய வேண்டிய ஒரு மாசு அகன்று, தமிழ்ச்சமுதாயத்தின் கறைபடிந்த பக்கம் கடந்தகாலச் செய்தியாகியது. வேற்றுமையான மனஉணர்வு மனிதர்களிடம் மட்டுமே பண்டுதொட்டுள்ளது. "மனிதனிடம்தான் சுயஉணர்வு இருக்கிறது. பசுவிடமோ, நாயிடமோ, சுயஉணர்வு இருப்பதில்லை. ஒரு பசு, நான் இந்தியப்பசு, அமெரிக்கப்பசு, ஜெர்சிப்பசு, கருப்பு, வெள்ளை என்றெல்லாம் எண்ணுவதே இல்லை". மனிதனிடம் தான் இத்தகைய வேற்றுமை உணர்வுகள் இருக்கின்றன. பலமொழிகள் பேசும் மாநிலங்களையும் கூட்டாட்சி முறைகளையும் கொண்ட நமது நாட்டின் ஒற்றுமைக்கும் உறுதிக்கும் மாநில அளவிலும் தேசிய அளவிலும் தெளிவும் தீர்க்கமான பார்வையும் கொண்ட உயிர்நாடியான மொழிக்கொள்கை, அந்தந்த மாநிலங்களின் கல்விக் கொள்கையிலும் இடம்பெறுகிறது.

இந்தி, இந்தியாவின் அலுவல்மொழி, ஆட்சிமொழி என்ற மைய அரசின் நிலையும், தமிழகத்தில் அதற்கிருக்கும் எதிர்ப்பும், மொழிக்கல்வி பற்றிய நமது பார்வையைப் பெரியஅளவில் பாதித்திருக்கிறது. பொதுவாக உலகில் பல நாடுகளிலும், இந்தியாவின் சில பகுதிகளிலும் மும்மொழிக் கல்வி நடைமுறையில் இருக்கிறது. தமிழ், ஆங்கிலம் தவிர ஏதாவது ஓர் இந்திய மொழி அல்லது ஜெர்மன், பிரெஞ்ச் போன்ற உலக மொழிகளில் ஒன்றை விருப்பப்பாடமாகப் படிக்கும் வாய்ப்பை இன்றில்லாவிட்டாலும் நாளை அனுமதிப்பது பற்றி நுட்பமாக ஆராயவேண்டும். இந்தி நமது நாட்டின் அலுவல்மொழி என்பதை நாம் புறக்கணிக்கவில்லை. தமிழகத்திலுள்ள அரசியல் கட்சிகள் இதைக் கட்சிப் பிரச்சனையாக ஆக்காது. தமிழ் மக்களின் எதிர்கால நலன்களை மனதில் கொண்டு மற்ற துறைகளில் என்ன வேற்றுமை இருப்பினும், மொழியைப் பொருத்தவரை ஒன்றுபட்டு குறைந்தபட்ச மொழிக் கொள்கை காணவேண்டும்.

# திருக்குறளின் திருவருள்

முதல்வர் முனைவர். க. சின்னப்பா

## முன்னுரை

மக்களுடைய வாழ்க்கையை அகம், புறம் என்று பாகுபாடு செய்து, அதன் பல்வேறு இயல்புகளை நுட்பமாக ஆராய்ந்த சங்க காலத்தையொட்டிப் புறப்பொருளின் ஒரு பகுதியாகிய அறத்தின் சிறப்பினை எடுத்துரைக்கும் அறநூல்கள் பல இயற்றப்பட்டன. அவை அமைப்பு முறையாலும் அறிவுறுத்தும் கருத்துக்களாலும் தனிப்பட்டதோர் இலக்கிய வகைமையாகச் சிறப்புற்று விளங்குகின்றன. அவற்றைப் பிற்காலச் சான்றோர்கள் 'நீதி நூல்கள்' என்னும் பெயரால் அழைக்கலாயினர். அவற்றுள் திருக்குறளும் ஒன்று.

"நல்ல இலக்கியங்கள் வாழ்க்கையை மையமாகக் கொண்டு தோன்றுபவை, வாழ்க்கையை முறையாக வளர்க்கும் இயல்பின, உலகமொழிகளில் இலக்கியங்கள் காடென மண்டிக் கிடக்கின்றன" என்று குறிப்பிடும் பொன்னம்பல அடிகளார், சில இலக்கியங்கள் கற்கத் தக்கன, சில இலக்கியங்கள் உணரத்தக்கன, சில இலக்கியங்கள் கற்று, உணர்ந்து வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தத்தக்கன, என்ற பிரான்சிஸ் பேகனின் இலக்கியத்தின் தரம் தொடர்பான கருத்தை ஏற்று, திருக்குறள் வாழ்க்கையில் பின்பற்றக்கூடிய சிறப்புடைய இலக்கியம் என்கிறார்.

## திருக்குறளின் தனிச்சிறப்பு

இலக்கியம் என்பது மனித இனத்தின் அனைத்துலக மொழியாகும். அது குறிப்பிட்ட பண்பாட்டு வரையறைகளையும், கட்டுப்பாடுகளையும் கடந்து அனைத்துலக நோக்கோடு மனிதனுடைய விருப்பு வெறுப்புகளையும் எண்ணங்களையும், எழுச்சிகளையும், வேட்கைகளையும், குறிக்கோள்களையும், பிரதிபலிக்கிறது. இலக்கியத்தின் சிறப்பினை, "இலக்கியம் அளிக்கும் இன்பம் நிலைபேறுடையதாக இருக்க வேண்டுமானால்; மனித வாழ்க்கையை மேம்பாடுடையதாக்கும் அறநெறிக் கருத்துக்களும், அனுபவ உண்மைகளும் அதில் இடம் பெற்றுத்தானாக வேண்டும். அப்பொழுதுதான் அது 'வாழும்

இலக்கியமாக' விளங்க முடியும்'' என்று டி.எஸ். எலியட் குறிப்பிடுகிறார். படைக்கப்பட்ட இலக்கியம் முக்காலத்திற்கும் பயனுடையதாக, முக்காலத்திற்கும் பொருந்துவதாக திருக்குறள் உள்ளது.

திருக்குறள் 133 அதிகாரங்களையுடையது. அதிகாரத்திற்குப் பத்துப் பாடல்கள் வீதம் 1330 பாடல்களையுடையது. 'குறள் வெண்பாவால்' அமைந்து 'ஒன்றே முக்கால்' அடியில் இவ்வுலகை அளந்திருப்பது சிறப்பு. இயற்கை இன்பவாழ்க்கை, அறவழியில் பொருளீட்டல், அறவழியில் வருகின்ற இன்பம், நன்மக்களைப் பெறுதல், குடும்பக் கடமை, நாட்டுக்கடமை, நானிலக்கடமை, நல்லொழுக்கம், தீயவை அகற்றல் எனப் பல்வேறு அரிய கருத்துக்களைத் திருக்குறளில் காணமுடிகிறது.

**புலவர்களும் அறிஞர்களும்**

திருக்குறளைக் கற்ற புலவர்களும், அறிஞர்களும் திருக்குறளைப் புகழ்ந்துள்ளனர். ஒரு நூல் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை,

> "தினையளவு போதாச் சிறுபுல்நீர் நீண்ட
> பனையளவு காட்டும் படித்தால்"

என்று கபிலர் பெருமகனார் குறிப்பிடுவார். சிறிய வரிகள் கூட படித்தால் பல்வேறு பெரிய உலகத் தத்துவங்களை வெளிக்காட்டுவதாய் இருந்தால்தான் சிறந்த இலக்கியம் என்பதைக் குறிப்பிடுகிறார். அப்படிப்பட்ட சிறப்பினைத் திருக்குறள் பெற்றிருப்பதனை,

> "வள்ளுவரும் தம்குறள்வெண் பாவடியால் வையத்தார்
> உள்ளுவ வெல்லாம் அளந்தார் ஓர்ந்து"

என்று பரணர் குறிப்பிடுகின்றனர்.

> "பரந்த பொருளெல்லாம் பாரறிய வேறு
> தெரிந்து திறந்தொறும் சேரச் - சுருங்கிய
> சொல்லால் விரித்துப் பொருள்விளங்கச் சொல்லுதல்
> வல்லாரார் வள்ளுவரல் லால்"

என்று அரிசில் கிழார் பெருமிதம் கொள்கிறார்.

"அறனறிந்தேம் ஆன்ற பொருளறிந்தேம் இன்பின்
திறனறிந்தேம் வீடு தெளிந்தேம் - மறனெறிந்த
வாளார் நெடுமார வள்ளுவனார் தம்வாயால்
கேளா தனவெல்லாம் கேட்டு"

என்கிறார் 'கொடிஞாழல் மாணிபூதனார்'

"கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்"

என்று இடைக்காடர் குறிப்பிடுகின்றார்.

"அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்"

என் ஔவை மூதாட்டியும் வியந்துள்ளார். அறம், பொருள், இன்பம் என்று மூன்று பால்களாகப் பிரிந்து, தனிப்பட்ட மனிதன் முதல் உலக மக்கள் வரை அனைவருக்கும் பொதுவான மறை நூலாகத் திருக்குறள் இருத்தலை அறிய முடிகிறது. வள்ளுவரைப் பற்றி, திரு.வி.க.வும் "திருவள்ளுவர் உலகுக்கு என்றே பயின்றார், உலகுக்கு என்றே வாழ்ந்தார், அதனால் அவர்தம் உள்ளத்தில் உலகம் நின்றது. அவர் உலகம் ஆயினார், உலகம் அவராயிற்று என்று குறிப்பிடுகிறார்".

திருக்குறளைப் படித்த உலகச் சான்றோராகிய ஆல்பர்ட் சுவைட்சர், எம்.எசு. மைக்கேல், அறிஞர் துறு, போப் ஐயர், இராபர்ட் கால்டுவெல், முனைவர் இலாசரசு, முனைவர் கிரௌல், எம்.அந்திரோனவ், பிரடெரிக்கு பின்காட்டு, சிவப்பிரகாசர், கவிமணி, பாரதியார், பாரதிதாசன், பேரா. பெ. சுந்தரனார் போன்றோர்கள் வள்ளுவத்தின் சிறப்பை உணர்ந்து உலகப் பொதுமறை நூல் என்று ஏற்றுள்ளனர். மறைமலையடிகளும், தேவநேயப் பாவாணரும், மூதறிஞர் இளங்குமரனாரும் வள்ளுவத்தையும் அதன் சிறப்பையும் பரப்பியுள்ளனர்.

**திருக்குறளால் தோன்றிய நூலகம்**

தஞ்சைப் பகுதியை ஆட்சி செய்த சரபோசி மன்னர் ஒரு முறை காசிக்குச் சென்றார். அப்படியே கல்கத்தாவில் இருந்த அரசப் பேராளரைக் கண்டு மகிழ்ந்தார். அரசப் பேராளர் திருக்குறளை ஆங்கில மொழிபெயர்ப்பு வழியாகக் கற்றிருந்தவர். அதனால் தமிழ்ப்

பகுதியில் ஆட்சி நடத்தும் சரபோசியின் வழியே திருக்குறளைப் பற்றி அறிய விரும்பினார். அதுவரை திருக்குறளைப் பற்றி அறியாமலிருந்த சரபோசி, பின்பு திருக்குறளைப் படித்து திருக்குறளின் பொதுமறையை உணர்ந்து தமிழ்ச் சுவடிகளைத் தொகுக்க முன்வந்து 'சரசுவதி மகால்' என்னும் கலைக்கருவூலத்தைத் தோற்றுவித்தார். நான்காம் தமிழ்ச்சங்கம் வளர்த்த வள்ளல் பொன். பாண்டித்துரைச் சாமித்தேவர் அவர்கள் திருக்குறளின் பிழையான பதிப்பைக் கண்டு, பதிப்பித்த அனைத்து ஏட்டுப் பிரதிகளையும் விலைக்கு வாங்கி தீ வைத்து திருக்குறள் மாசுபடாமல் காத்து செம்மொழிக்குச் சிறப்பு செய்தார். திருக்குறளைப் படித்த தால்சுதாய் 'இந்துக்களின் குறள்' என்று குறிப்பிட்டுள்ளார். உலக இலக்கியங்களில் பரிமேல்ழகர் முதல் தற்போதைய முதல்வர் மு. கருணாநிதி வரை உள்ளிட்ட ஆயிரக்கணக்கானோர் திருக்குறளுக்குத்தான் அதிகம் உரையெழுதியுள்ளனர். உலக அறிஞர்களும் திருக்குறளைத்தான் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்த்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**இறைவணக்கம்**

"பாயிரம் அல்லது பனுவல் அன்றே" என்று இலக்கணங்கள் குறிப்பிடும். பாயிரத்தில் கடவுள் வாழ்த்து, மன்னன், நூல் அரங்கேற்றம், தலைமை ஏற்போன் போன்ற நிகழ்வுகள் இடம் பெற்றிருக்கும். ஆனால் வள்ளுவத்தில் எந்த ஒரு மன்னன், இடம், தெய்வம் என்ற குறிப்புப் பொருளைச் சுட்டாமல் பாயிரமாக,

"ஆதிபகவன் முதற்றே உலகு"

"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தோர் மாட்டு"

எச்சமயத்தைச் சார்ந்தவராக இருந்தாலும், இறைவனின் அழிவற்ற புகழ் வழியை விரும்பி நடப்பவருக்கு அறிவை மயக்கும் நல்வினைகளும், தீயவினைகளும் சேராது என்று இறைவணக்கத்தைத் தொடங்கி வைக்கிறார். பின்பு வானின் சிறப்பு பற்றற்ற துறவோரையும் குறிப்பிடுகிறார். இத்தகைய பற்றற்றோர் செயற்கரியசெயல்களைச் செய்வர் (குறள் 36) என்றும் சொல்லிய சொல்லை நிறைவேற்றுவர் என்றும் (குறள் 38) இவர்கள் அறமான ஒழுக்கத்தைக் கடைபிடிப்பர் என்றும் குறிப்பிடுகிறார்.

## அறவாழ்க்கை

அறம் என்று வள்ளுவர் குறிப்பிடுவது ஒழுக்கம். இந்த ஒழுக்கம் உயிரை விடச் சிறந்ததாகப் போற்றப்படும். இத்தகைய அறத்தால் புகழும், நிறைந்த பொருளும் வரும்போது, அவற்றிற்கு என்றைக்கும் அழிவில்லையாம். இதனை வள்ளுவர்,

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது" (குறள் 55)

அன்பும் அறனும் கலந்திருக்க வேண்டும் என்கிறார். அன்பும் அறனும் உள்ள ஒருவன் பழிக்கு அஞ்சி, அறவாழ்க்கை வாழ்ந்து, இயல்பான அறவாழ்க்கை, பிறரை நல்வழிப்படுத்தும் வாழ்க்கை பழி இல்லாத நல்ல புகழ் போன்ற நடைமுறைகளைத் தன் வாழ்வில் கடைப்பிடித்து வாழ்ந்தால்,

"வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" (குறள் 60)

என்று போற்றுகிறார்.

நல்ல துணைநலம், நல்ல மக்கள், அன்பான வாழ்க்கை, முகம் திரிந்து நோக்காமல் விருந்தோம்பல், எல்லாரிடமும் இனியவை கூறல், நன்றி மறவாமல் இருத்தல் நீதிக்கு நடுநிலைமை பிறழாமலிருத்தல், அடக்கமான வாழ்க்கை, நல்ல ஒழுக்கம், மாற்றான் மனைவியை விரும்பாமல் வாழ்தல், பொறுமை காத்தல், பொறாமை கொள்ளாதிருத்தல், பிறருடைய பொருளை விரும்பாமலிருத்தல் புறங்கூறாத வாழ்க்கை, பயனான சொற்களைப் பேசுதல், தீயவற்றுக்கு அஞ்சுதல், பொதுநலம், இல்லையென்பவருக்கு ஈதல், ஊன் உண்ணுதலை வெறுத்தல், தவறான ஒழுக்கம் நீத்தல், திருட்டுத்தனம் நீத்தல், கோபம் தவிர்த்தல், துறவு, உண்மை அறிதல், ஆசையை நீக்குதல் ஆகிய நெறிமுறைகளைக் கடைப்பிடித்து வாழும் வாழ்க்கையைத்தான் வையத்துள் வாழ்வாங்கு வாழும் வாழ்க்கை என்று வள்ளுவப் பெருமகனார் குறிப்பிடுகின்றார்.

## அரசும் மக்களும்

அரசை இயக்கும் மன்னனைப் பற்றிச் சங்க இலக்கியம்,

"நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்"

என்று மன்னன் 'தான்' மனித உயிர்களுக்கு முதன்மையானவன் என்று குறிப்பிடுகிறது. இதனை அறிந்த வள்ளுவரும் சிறந்த ஆட்சியைப் பற்றிக் குறிப்பிடும் போது,

"படைகுடி கூழ் அமைச்சு நட்பரன் ஆறும்
உடையான் அரசருள் ஏறு" (குறள் 391)

என்று படை, குடி, உணவு, நல்ல அமைச்சு, நட்பு, பாதுகாப்பு என்னும் ஆறு உறுப்புகளைப் பெற்ற ஆட்சியே சிறந்த ஆட்சி என்கிறார்.

மன்னன் தகுதியான எந்த ஒரு செயலைச் செய்யும்போதும் காலம் தாழ்த்தாமை, நல்ல கல்வி, எதையும் செய்யும் துணிவு வேண்டும் என்கிறார். அதோடு நாட்டுக்கு வருவாய், மக்களைக் காத்தல், காண வருபவருக்கு எளிதில் காட்சி தருதல், இனியவை கூறி கொடையளித்தல், மக்களைப் பேணிக்காத்தல் போன்றவைகளைக் கடைபிடித்து வாழும் மன்னன்.

"மக்கட்கு இறையென்று வைக்கப்படும்' (குறள் 388)

என்கிறார்.

**கல்வியின் பெருமை**

'கற்றவருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு' என்னும் வாக்கிற்கிணங்க கல்வியின் அவசியத்தைப் பற்றி வள்ளுவரும்

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக" (குறள். 401)

என்ற குறிப்பிட்டதோடு எண்ணும், எழுத்தும், வாழும் மனிதர்களுக்கு உயிர் என்றும், கல்வியினால் அறிவு பெருகும் என்றும் குறிப்பிட்டு இப்பிறவியில் ஒருவன் கற்ற கல்வி,

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்
கெழுமையும் ஏமாப் புடைத்து" (குறள். 408)

என்கிறார்.

**காலம் கருதிச் செயல்படல்**

'உறுமீன் வரும்வரை காத்திருக்குமாம் கொக்கு'

என்னும் முதுமொழிக்கு ஏற்ப எந்த ஒரு செயலைச் செய்வதாக இருந்தாலும் காலம் என்பது முக்கியம் என்பதை உணர்ந்து,

"பருவத்தோ டொட்ட ஒழுகல்"

"கருவியான் காலம் அறிந்து செயின்?"

"காலம் கருதி இடத்தால் செயின்"

"காலம் கருதி இருப்பர்"

என்று காலத்தின் பயனைக் குறிப்பிடுகிறார்.

**மனநிலை அறிதல்**

பிறர் மனம் நோகாமல் நடக்க வேண்டும் என்ற சொல்லாடலுக்கேற்ப பிறர் மனம் புரிந்து நடப்பவனை வள்ளுவர்,

"கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்
மாறாநீர் வைபக் கணி" (குறள் 711)

என்றும் ஒருவனின் உள்ளக் கருத்தினை அறிந்தவன் கடவுளுக்கு ஒப்பானவன் என்றும், முகத்தை நோக்கி தெளிவு பெற வேண்டும் என்றும், கண்களைப் பார்த்து குறிப்பை அறிய வேண்டும் என்றும் மனக்குறிப்பு அறிதலைக் குறிப்பிடுகிறார். நல்ல மனம், நல்ல மனிதன், நல்ல அரசன் உள்ள நாடு,

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு" (குறள் 734)

கடுமையான பசி, நீங்காத நோய், அழிவு தருகின்ற பகை என்னும் தீமைகள் சேராமல் அமைதியாக நடைபெறும் என்கிறார்.

**முடிவுரை**

தனிமனித மனத்திலிருந்து நாட்டு மக்கள், மன்னன், தெய்வம், நாடு, இயற்கை எனப் பல்வேறுநிலை சார்ந்த அறக்கருத்துக்களை வழங்கி உலக அறிஞர்களால் "பொதுமறை" நூல் என்று ஏற்றுக் கொள்ளப்பட்ட திருவருள் திருக்குறளாகும்.

******

# இலக்கியத்தில் இளமையும் முதுமையும்

புலவர் சி. பாண்டுரெங்கன், ஆம்பூர்.

(முன் இதழின் தொடர்ச்சி....)

"நோன்பகட்(டு) உமணர் ஒழுகையொடு வந்த
மகாஅர் அன்ன மந்தி மடவோர்
நகாஅர் அன்ன, நளிநீர் முத்தம்
வாள்வாய் எருந்தின் வயிற்றகத்து அடக்கி,
தோள்புறம் மறைக்கும், நல்கூர் நுசுப்பின்,
உளர்இயல் ஐம்பால் உமட்டியர் ஈன்ற
கிளர்பூண் புதல்வரொடு கிலுகிலி ஆடும்
தத்துநீர் வரைப்பின் கொற்கை சிறுபாண்".

இன்றைக்கும் கிராமத்தில் பனங்குருத்தில் பிடிவைத்துப்பின்னி சிறு கற்களையிட்டுக் கிலுகிலுப்பையாக்கித் தந்தாலே, சிறுவர் முகத்தில் புன்னகை அரும்புகள் நிரம்பும். ஆனால், முத்துக்களை இட்டு உருவாக்கிய கிளிஞ்சல் கிலுகிலி இவ்விருபத்தொன்றாம் நூற்றாண்டில் கண்காட்சியில்கூடக் காணக்கிடைக்க வில்லையன்றோ?

நற்றிணை பாடல் வரிகள் (4–8) உப்புக்குவியல் காயும் கடற்கரையில் விளையாடும் சிறுமிகள், காயும் மீன் கவரவரும் பறவைகளை ஓட்டுவர். படகுகளை விளையாட்டு முறையில் எண்ணி, எண்களையும் கற்றதை நாம் உய்த்துணரலாம்:

"புலவுமீன் உணங்கல் படுபுள் ஓப்பி
மடநோக்கு ஆயமொடு உடன் ஊர்பு ஏறி,
'எந்தை திமில் இது நுந்தை திமில்' என
வளைநீர் வேட்டம் போகிய கிளைஞர்
திண்திமில் எண்ணும் தண்கடற் சேர்ப்ப"

இளமையது அருமையைக் கலித்தொகை (18) எளிய வரிகளில் எடுத்தியம்புகிறது.

"இளமையும் காமமும் ஓராங்குப் பெற்றார்
வளமை விழைதக்கது உண்டோ...
—அரிது அரோ
சென்ற இளமை தரற்கு"

சிறுவர் கிண்கிணி அணிதலையும் அவர் வாய் பவழமணிபோல் அழகுற விளங்குதலையும், வடம வண்ணக்கன் பேரிசாத்தனர் (புறநா198) உணர்த்தியுள்ளார்.

“அருவி தாழ்ந்த பெருவரை போல
ஆரமொடு பொலிந்த மார்பில் தண்டா
கடவுள் சான்ற கற்பின், சேயிழை
மடவோள் பயந்த மணிமருள் அவ்வாய்க்
கிண்கிணிப் புதல்வர் பொலிக”

சிறுவர் அழுகையை மாற்ற தாயின் முயற்சிகளாக மறப்புலியை வரவு சொல்லி அச்சமுறுத்துதல், அம்புலி காட்டுதல், அழுகை நில்லாமையின் நின் பிதாவை நினைந்து வெறுத்தபின் செவ்வியைக் காட்டு எனக் கூறுகிறாள் எனக்காட்டும் பா (குமணனைப் பெருஞ் சித்தரனார் பாடிய புறம் 160)

“இல்லுணாத் துறத்தலின், இல்மறந்து உறையும்
புல்உளைக் குடுமிப்புதல்வன் . . .
உள்இல் வறுங்கலம் திறந்து, அழக்கண்டு
நொந்தன ளாகி, நுந்தையை உள்ளி
பொடிந்தநின் செவ்வி காட்டு’ என......”

குழந்தை அழுகையின் அடிப்படைக்காரணம் அதன் பசியை உடனடியாக ஆற்ற இயலா வறுமை நிலை; அதனால்தான் போலும் கொடிது கொடிது இளமையில் வறுமை எனவும், வயிற்றுக்குச் சோறிட வேண்டும் இங்கு வாழும் மனிதருக் கெல்லாம்’ எனவும் அழகு தமிழில் சொல்லி வைத்தனர்.

“பொருளில்லான் இளமைபோல் புல்லென்றாள் . . .”

எனக் கலித்தொகை (38–15) கூறும் வரி, இளமையில் வறுமை கொடியது என உணர்த்தும் குறுந்தொகை (161) பாடலில் நக்கீரர்.

“புலிப்பல் தாலிப் புதல்வற் புல்லி”

என்றார். பொன்னால் ஆன ஐம்படைத் தாலியைப் புதல்வன் அணிந்திருத்தலை, அகநானூறு (54) பாடல் வரிகளும் உணர்த்தும்:

"முகிழ்நிலாத் திகழ்தரும் மூவாத் திங்கள்
பொன்னுடைத் தாலி என்மகன் ஒற்றி
வருகுவை ஆயின் தருகுவென் பால் என...."

இனி, சோழன் கரிகாற் பெருவளத்தானைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடிய பட்டினப்பாலை, சிறுவர் சிறுதேர் உருட்டுதலை, நயமுற நமக்குக்காட்டும் பாங்கினைக் காண்போம்.

"சுடர்நுதல், மட நோக்கின்,
நேர்இழை மகளிர் உணங்குஉணாக் கவரும்
கோழி எறிந்த கொடுங்காற் கனங்குமழை
பொற்காற் புதல்வர் புரவி இன்று உருட்டும்
முக்காற் சிறுதேர் முன்வழி விலக்கும்......."

ஆக பொன்னணி வழிவிலக்கும் செல்வவள முற்றத்தில் புதல்வர் சிறுதேர் உருட்டிய பாங்கு, உள்ளத்தல் உவகையூட்டுகிற தன்றோ?

"குழந்தையும் தெய்வமும் ஒன்று
குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே"

என்றெல்லாம் பழமொழிகள் உள.

இளமையைக் கொண்டாடும் முகத்தான் எழுந்தவையே பிள்ளைத் தமிழ் நூல்கள். 96 வகைச் சிற்றிலக்கியங்களுள் பலருடைய உள்ளத்தையும் கொள்ளைகொண்டு அன்று முதல் இன்றுவரை புதியன உருவாகிக் கொண்டே இருக்கும் களனாகத்திகழ்வது பிள்ளைத்தமிழ் இலக்கியம். குமரகுருபரர் ஒருவரே மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் எனும் இரு நூல்களையும் இயற்றியுள்ளதே, இவ்விலக்கியம் புலவர் நெஞ்சில் பெற்ற உயரிடத்தை அறியவைக்கும்.

சிற்றிலக்கியங்கள் 96 வகையை வீரமாமுனிவரின் சதுரகராதி சுட்டுகிறது. இவற்றின் இலக்கணங்களைப் பன்னிருபாட்டியல் முதலாக சிதம்பரப் பாட்டியல் வரையாகவுள்ள பாட்டியல் நூல்கள் விவரிக்கின்றன. பிள்ளைத் தமிழின் இலக்கணமாகக் கூறப்பட்ட கருத்துக்களின் தொகுப்பு.

கடவுளரையோ, அரசரையோ, பிறரையோ குழந்தையாகப் பாவித்து, அதனைப் பத்துப்பருவங்களாகப் பகுத்துக்கொண்டு பருவத்துக்கு பத்து ஆசிரியவிருத்தங்கள் அமையப் பாடுவதே பிள்ளைத்தமிழ் இலக்கியம். இவை தனித்தனிப் பாடல்களின் தொகுதி. முதல் ஏழு பருவங்கள் இரு பாலர்க்கும் பொது, அடுத்த மூன்றும் வேறு வேறாக அமைந்து, இலக்கிய இன்பம் ஊட்டுவன.

ஆண்பால் பிள்ளைத்தமிழ் 10 பருவங்களாவன.

| | | | |
|---|---|---|---|
| 1. | காப்பு | 6 | வருகை |
| 2. | செங்கீரை | 7 | அம்புலி |
| 3. | தால் | 8 | சிற்றில் |
| 4. | சப்பாணி | 9 | சிறுபறை |
| 5. | முத்தம் | 10 | சிறுதேர் |

பெண்பாலுக்கு 8,9,10 ஆம் பருவங்கள், அம்மானை, நீராடல், ஊசல் என அமையும்.

இக்கட்டுரையில் அம்புலி காட்டலாக உள்ள, (கலி 80, புற 160, அக 54) மூன்று பாடல்களின் வரிகளையும் சிறுதேர் உருட்டுதலாக உள்ள (பட்டினப்பாலை 24–25) ஓர் இடமும், சங்க இலக்கியத்திலிருந்து கண்டு மகிழ்ந்தோம். முன்னரும் சிற்றில் இழைக்கும் வழக்கத்துக்கு ஓர் எடுத்துக்காட்டு,

> "கோடுவாய் கூடாப் பிறையை., பிறிது ஒன்று
> நாடுவேன் கண்டனென், சிற்றிலுள் கண்டு"
>
> கலி. 142 (24–25)

ஆக பிள்ளைத்தமிழ் நூல்களின் வேர், சங்க காலத்திலும், அவற்றின் வளர்ச்சி எட்டாம் நூற்றாண்டு தொடங்கியும் கருத்து மலர்களும் தத்துவக் கனிகளும் கணினியுகம் தொட்டும், மகிழ்வூட்டுவன எனில், மிகையாகாது.

சில பிள்ளைத்தமிழ் நூல்களிலிருந்து முத்தமிழ்க் கூட்டினைச் சுவைப்போமோ?

குமரகுருபரரின் முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் செங்கீரைப் பருவம் ஒரு பாடல்

(கீர்–சொல்; அரும்பு மழலையொலி! தொட்டில்பிள்ளை, தலையை உயர்த்திக் கையால் ஊன்றி, உடம்பை அசைத்தலைச் செங்கீரையாடுதல் என்பர்)

"விரல்சுவை யுண்டு கனிந்தமு தூறிய மெல்லிதழ் புலராமே
விம்மிப் பொருமி விழுந்தழு தலறியுன் மென்குரல் கம்மாமே
கரைவுறும் அஞ்சன நுண்டுளி சிந்திக் கண்மலர் சிவவாமே
கலுழ்கலு ழிப்புனல் அருவி படிந்துடல் கருவுடி வுண்ணாமே
உருவ மணிச்சிறு தொட்டி லுதைத்துநி னொண்பத நோவாமே
ஒருதா ளூந்தி யெழுந்திரு கையும் ஒருங்கு பதித்துநிமிர்ந்
தருள்மொழி திருமுக மசைய வசைந்தினி தாடுக பதித்துநிமிர்ந்
ஆதி வயித்திய நாத புரிக்குகன் ஆடுக செங்கீரை".

இதில் வயித்தியநாதபுரி என்பது, புள்ளிருக்குவேளூர் (வைத்தீசுவரன் கோயில்) தலத்தைக் குறித்தது.

கலுழ்–அழுகை

**கலுழிப்புனல் அஞ்சனம் (மை) கரைந்த கண்ணீர்**

குழந்தையின் சிறுநடையிலும், பெற்றோரும் சுற்றமும் முத்தம் தருமாறு வேண்டும் செய்திகூறல் முத்தப்பருவம், திருச்செந்தூர் (முருகன்) பிள்ளைத்தமிழ், பகழிக்கூத்தர் இயற்றிய நூலாகும். இதில் முத்தப் பருவப்பாடல் ஒன்று :

கத்தும் தரங்கம் எடுத்தெறியக்
கடுஞ்சூல் உளைந்து வலம்புரிகள்
கரையில் தவழ்ந்து வாலுகத்தில்
கான்ற மணிக்கு விலையுண்டு
தத்தும் கரட 'விகடதட
தந்திப் பிறைக்கூன் மருப்பில்விளை
தரளந் தனக்கு விலையுண்டு
தழைத்துக் கழுத்து வளைந்தமணிக்
கொத்துஞ் சுமந்த பசுஞ்சாலிக்
குளிர்முத் தினுக்கு விலையுண்டு
கொண்டல் தருநித் திலந்தனக்குக்
கூறுந் தரமுண் டுன்கனிவாய்

முத்தந் தனக்கு விலையில்லை
முருகா முத்தம் தருகவே
முத்தம் சொரியும் கடலலைவாய்
முதல்வா முத்தந் தருகவே"

பல வகை முத்துக்களும் விலையுண்டு, ஆனால் கொவ்வைக்கனிபோல் சிவந்த வாயினையுடைய (குழந்தையாகிய) நீ தரும் முத்தத்துக்கு விலை கிடையாது (விலை மதிப்பற்ற உயர்வானது) ஆதலால், முத்துப்போல் நீர்த்திவலை சிதறும் அலைமிக்க திருச்செந்தூர் கடற்கரையில் விளங்கும் முதல்வனாம் முருகா, முத்தம் தருக (சாலி–நெல்).

வலம்புரிச்சங்கு, யானைத்தந்தம், நெல், மேகம், தாமரை, வாழை, கரும்பு, கழுகு, மூங்கில், நத்தை உடும்பு, மீன், சிப்பி, முதலை, நிலா, பசு, பன்றி, நாகம், கொக்கு, மகளிர் என்பனவற்றுள் முத்துக்கள் தோன்றும் எனப்புலவர்கள் கூறும் இலக்கிய மரபறிந்து இயற்றிய சுவைமிகு பாடலன்றோ!

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, சங்கத்தமிழ் வளர்த்த பெருமைக்குரியது மதுரை. பொன். பாண்டித்துரைத் தேவர், சுற்றமும் நட்பும் சூழத் தமிழ்த்தொண்டு புரிய நிறுவிய (நான்காம்) தமிழ்ச் சங்கத்தின் இன்றும் தொடரும் நற்பணிகளால், செந்தமிழால் தமிழ் மாணவரின் நெஞ்சில் நீங்கா இடம் பெற்று விளங்குவது மதுரை. மதுரையில் அருளாட்சி செய்யும் அன்னை மீனாட்சியைப் பாட்டுடைத் தலைவியாகக் (குழந்தையாக) கொண்டு குமரகுருபரர் பாடிய மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் நூலை (மீனாட்சியம்மை திருக்கோவிலில் அரங்கேற்றம் செய்தார். வருகைப் பருவம் "தொடுக்கும் கடவுள்..." எனத் தொடங்கும் இப்பாடலின் பொருள் நயம் கூறிக்கொண்டிருந்தார். அப்போது, அன்னை மீனாட்சியே பெண்குழந்தை வடிவத்தில் குமரகுருபரருக்கு மணிமாலையைப் பரிசளித்தார் என்பது செவிவழிச் செய்தி.

பாடல்

"தொடுக்கும் கடவுள் பழம்பாடல்
தொடையின் பயனே! நறைபழுத்த
துறைத்தீந் தமிழன் ஒழுகுநறுஞ்
சுவையே! அகந்தைக் கிழங்கையகழ்ந்
தெடுக்கும் தொழும்பர் உளக்கோயிற்(கு)
ஏற்றும் விளக்கே! வளர்ச்சிமைய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே! எறிதரங்கம்
உடுக்கும் புவனம் கடந்துநின்ற
ஒருவன் திருவுள் ளத்திலழகு
ஒழுக எழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே! மதுக்ரம்வாய்
மடுக்கும் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே! வருகவே!
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே! வருக! வருகவே!"

உதயத்திற்கு முன் கீழ்வானில் சூரியன் வெளிச்ச வெள்ளம் பாய்ச்சுவது போல தம் வாழ்நாளில், பிற்காலத்தில், புகழ்பெற்று விளங்கியவர்கள். அதன் அறிகுறியை, இளமைப் பருவத்திலேயே உணர்த்தியுள்ளனர். எடுத்துக்காட்டாக மூன்று நிகழ்வுகளைக் காண்போம்

## 1. பாரதியார்

இளமைப் பருவத்திலேயே விடுதலைக்குயில் சுப்பிரமணிய பாரதியார் தமிழார்வம் மிக்கவராகவும் கவிதைப்புனையும் திறன் உடையவராகவும் திகழ்ந்தார்.

குதிரை கொள் தின்றால் கழுதைக்கு வயிறு வலிக்குமாம் என்பது பழமொழியன்றோ ?.

அவரைக்கண்டு பொறாமை கொண்டவரும் இருந்ததால் காந்திமதிநாதன் என்பவர். 'பாரதி சின்னப் பயல்' என முடியுமாறு வெண்பா பாடச் சொன்னார்.

பாரதியாரோ சற்றும் தயங்காமல் வெற்றி வாகை சூடும் மாவீரனைப்போல நடந்து கொண்டார்! எப்படி ?

பொறாமை காரிருள்போல் நெஞ்சில் சூழ்ந்து, அறிவு வெளிச்சத்தை மறைக்கும், காந்திமதிநாதனைப்பார் அதிசின்னப்பயல் என்பது பொருளாக அமைந்து, இளமையிலேயே பாரதியார் பெற்ற திறமைக்கு ஓர் ஆவணம் ஆயிற்று.

பாடல்

ஆண்டில் இளையவனென் றந்தோ, அகந்தையினால்
ஈண்டிங் கிகழ்ந்தென்னை ஏளனஞ்செய் மாண்பற்ற
காரிருள்போ லுள்ளத்தான காந்திமதி நாதனைப்
பாரதி சின்னப் பயல்.

இதே ஈற்றடியில் மற்றொரு பாடலையும் பாரதியார் பாடினார்.

ஆண்டிலிளையவனென் றைய, அருமையினால்
ஈண்டின்றென் றன்னை நீ யேந்தினையால் - மாண்புற்ற
காரதுபோ லுள்ளத்தான் காந்திமதி நாதற்குப்
பாரதி சின்னப்பயல்

மேலும் கந்தர்கலிவெண்பா முதல், சகலகலாவல்லிமாலை வரை பதினைந்துக்கும் குறையாத நூல்கள் இயற்றியும் காசிவரை சென்று அறம் வளர்த்தும் புகழுற்ற குமரகுருபரரும் இளமையில் பாடத் தொடங்கியவரே.

உலகின் புகழ்மிகு நோபெல் பரிசினைத் தம் கீதாஞ்சலி நூலுக்காகப் பெற்றதும், சாந்திநிகேதன் மூலம் கல்வி வழங்கியும், புகழ்பெற்ற இரவீந்திரநாத்தாகூரும், இளம்பருவத்திலேயே கவிதை இயற்றத் தொடங்கியவர்தாம்.

(தொடரும்......)

## ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. சுப. அண்ணாமலை

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா

தொடர்பு முகவரி :

**ஆசிரியர், செந்தமிழ்,**

**மதுரைத் தமிழ்ச்சங்கம்,**

**மதுரை–625001.**

**தொலைபேசி : 0452-6575615**

பதிப்பாசிரியர் : **இரா. அழகுமலை**, எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர், மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.
தொலைபேசி : (0452) 6575615

அச்சிடுவோர் : நலம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை – 1.

RNI Regd. No.: 5508/56 August 2009




# செந்தமிழ்க் கல்லூரி
# மதுரைத் தமிழ்ச் சங்கம்

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் தேசியத் தரம் பெற்றது.)
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

**54, தமிழ்ச்சங்கம் சாலை, மதுரை - 1.**
**தொலைபேசி 0452-2343707. நிகரி 0452-4373475**

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வு பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புகள் உள்ளன.**

| | | |
|---|---|---|
| **இரா. அழகுமலை**<br>செயலாளர்<br>மதுரைத் தமிழ்ச் சங்கம் | **முனைவர் க. சின்னப்பா**<br>முதல்வர்<br>செந்தமிழ்க் கல்லூரி | **இரா. குருசாமி**<br>செயலாளர்<br>செந்தமிழ்க் கல்லூரி |



அனுப்புநர்,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை- 625001.

From,
Secretary,
Madurai Tamilsangam,
Madurai - 625001.
TAMILNADU, S. INDIA


பெறுநர் / To,

Printed by V.Govindarajan, published by R.ALAGUMALAI on behalf of Madurai Tamil Sangam, Madurai and printed at Davam Printers, 32, West masi Street, Madurai-1, and published at 54, Tamil sangam road, Madurai. Editor R. ALAGUMALAI.